AP 2


## சுருக்கம்

வேளாண்மைத் துறை – தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் முழுமையாகவும், திருச்சி, அரியலூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் பகுதியாகவும் உள்ளடக்கிய காவேரி டெல்டா பாசனப் பகுதிகளுக்கு குறுவை சாகுபடித் தொகுப்புத் திட்டம், 2017 – செயல்படுத்திட ரூ.56.92 கோடி நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.


---

## வேளாண்மை (வேஉ.2) துறை

**அரசாணை (நிலை) எண்.144** **நாள்:13.06.2017**

**திருவள்ளுவர் ஆண்டு 2048,**
**வைகாசித் திங்கள் 30 ஆம் நாள்**

**படிக்க:**

1. வேளாண்மை இயக்குநரின் கடித எண்.நெ&சி 1/41728/2017, நாள்:10.06.2017 மற்றும் 12.6.2017.
2. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிக்கை நாள்:12.06.2017.

--------

**ஆணை:**

நடப்பாண்டில் மேட்டூர் அணையின் நீர் இருப்பு போதுமானதாக இல்லாததால் குறுவை சாகுபடிக்காக அணையை ஜூன் 12ஆம் தேதி அன்று திறந்துவிட இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, நிலத்தடி நீரை சிக்கனமாக பயன்படுத்தி நெற்பயிருக்கு மாற்றாக பயறுவகை சாகுபடியை ஊக்குவிப்பது அவசியமாகிறது. இதுதொடர்பாக 12.06.2017 அன்று நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறுவை விவசாயிகளின் நலனை பாதுகாத்திட ரூ.56.92 கோடி செலவில் கீழ்கண்ட இனங்களை உள்ளடக்கிய குறுவை சாகுபடி தொகுப்புத்திட்டம் 2017னை அறிவித்துள்ளார்.

1. 12 மணி நேர தடையில்லா மும்முனை மின்சாரம் வழங்குவது.
2. தற்போதுள்ள நீர் ஆதாரங்களைக் கொண்டு, குறுவை பருவத்தில், நெல் பயிர் 1.60 இலட்சம் ஏக்கர் பரப்பளவிலும், பயறுவகை பயிர்கள் 1.32 இலட்சம் ஏக்கர் பரப்பளவிலும் சாகுபடி மேற்கொள்ளப்படும்.
3. உழவு மேற்கொள்வதற்கான உதவித் தொகை.
4. நீர் பாசனக் குழாய்கள் (PVC) மானியத்துடன் வழங்குவது.
5. இயந்திர நடவு முறையை ஊக்குவிப்பது.
6. நெல் மற்றும் பயறு வகை உற்பத்தியினை அதிகரிக்கும் இடுபொருட்களுக்கான உதவித் தொகை வழங்குவது.
7. வெண்ணாறு பகுதிக்கான பசுந்தாள் உர பயிர் விதை விநியோகம்.

2. இந்நிலையில், வேளாண்மை இயக்குநர் அவர்கள் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் முழுமையாகவும், திருச்சி, அரியலூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் பகுதியாகவும் உள்ளடக்கிய காவேரி டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தினை ரூ.5692.00 இலட்சம் செலவில் செயல்படுத்திட மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட கருத்துருவில் கீழ்க்கண்டவற்றிற்கு அரசாணையினை கோரியிருந்தார்.

(அ) குறுவை தொகுப்புத் திட்டம் 2017–னை காவேரி டெல்டா மாவட்டங்களில் செயல்படுத்தும் வகையில் ரூ.5692.00 இலட்சத்திற்கு (தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் – ரூ.2486 இலட்சம், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் – ரூ.240 இலட்சம், விதை மற்றும் நடவு பொருள்களுக்கான துணை இயக்கம் – ரூ.432 இலட்சம் மற்றும் மாநில நிதி – ரூ.2534 இலட்சம்) ஒப்பளிப்பு வழங்குதல்.

(ஆ) திட்ட இனங்களில் நிதி சேமிப்பு ஏதும் இருப்பின், ஒப்புதல் வழங்கப்பட்ட திட்ட இனங்களில், கூடுதல் பரப்பில் செயல்படுத்த அனுமதி வழங்குதல்.

(இ) வெவ்வேறு கணக்குத் தலைப்புகளின் திருத்திய / இறுதி நிதி ஒதுக்கம் 2017–18ல் எதிர்நோக்கி, நிதிநிலை பெற்று செலவிட வேளாண்மை இயக்குநருக்கு அதிகாரம் வழங்குதல்.

(ஈ) விளம்பரம், ஆவணப்படுத்துதல் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான விளம்பர செலவினத் தொகை ரூ.13.00 இலட்சம் நிதியினை தேசிய வேளாண் வளர்ச்சித் திட்ட நிர்வாக செலவினங்களுக்காக வழங்கப்பட்ட நிதியிலிருந்து வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு பெற்று வழங்க தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் செயல் இயக்குநருக்கு அதிகாரம் வழங்குதல்.

(உ) மானியத் தொகையை விடுவிப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்கள் / வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களுக்கு அதிகாரம் வழங்கிட திட்டம் செயல்படுத்தும் அமைப்பாக உள்ள வேளாண்மை இயக்குநருக்கு அனுமதி வழங்குதல்; மற்றும்

(ஊ) திட்ட இனங்களை செயல்படுத்தும் வழிகாட்டு நெறிமுறைக்கு அனுமதி.

3. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலனை செய்து பரிசீலனைக்குப் பின்னர் அக்கருத்துருவை ஏற்று ரூ.56.92 கோடி ஒப்பளிப்பு செய்ய முடிவெடுத்து கீழ்க்கண்ட திட்டங்களிலிருந்து தொகை செலவிட ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1 | தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் (NADP) (தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையிலிருந்து – நிர்வாக செலவினம் ரூ.13.00 இலட்சம் உட்பட) | 2486.00 |
| 2 | தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் (NFSM) | 240.00 |
| 3 | விதைகள் மற்றும் நடவு பொருள்களுக்கான துணை இயக்கம் (SMSP) | 432.00 |
| 4 | மாநில நிதி | 2534.00 |
| | மொத்தம் | 5692.00 |

(ரூபாய் ஐம்பத்தாறு கோடியே தொண்ணூற்று இரண்டு இலட்சம்)

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் முழுமையாகவும், திருச்சி, அரியலூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் பகுதியாகவும் உள்ளடக்கிய காவேரி டெல்டா பாசனப் பகுதிகளில் 2017–ஆம் ஆண்டில் குறுவை சாகுபடித் தொகுப்புத் திட்டத்தினை இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ள விவரப்படியும், வழிகாட்டு நெறிமுறையின்படியும் செயல்படுத்திட வேளாண்மை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்கு தலைப்புகளில் பற்று வைக்கப்படும்.

**1. National Agricultural Development Programme (NADP)**

**(Rs.in lakh)**

| Head of account | Detailed Head | Sub Detailed head | DPC | Amount Sanctioned |
|---|---|---|---|---|
| 2401-00-Crop Husbandry - 800 other expenditure – Schemes Shared between State and Centre – UF – National Agricultural Development Programme (NADP-RKVY) Agriculture Department. | 11 Subsidies | 01 Individual based Subsidy | 2401-00-800-UF-1111 | 1978.40 |
| 2401-00- Crop Husbandry – 789 Special Component Plan for Schedule Castes – Schemes Shared between State and Centre – UN – National Agricultural Development Programme (NADP - RKVY) under Special component plan – Agriculture department | 11 Subsidies | 01 individual based Subsidy | 2401-00-789-UN-1111 | 494.60 |
| | **Sub Total** | | | **2473.00** |
| TAWDEVA – Administrative fund for advertisement and publicity | | | | **13.00** |
| | **TOTAL** | | | **2486.00** |

**2. National Food Security Mission (NFSM)**

**(Rs. in lakh)**

| Head of account | Detailed Head | Sub Detailed head | DPC | Amount Sanctioned |
|---|---|---|---|---|
| 2401-00-Crop Husbandry – 112-Development of Pulses Schemes Shared between State and Centre - UB – National Food Security Mission. | 09 Grants in Aid | 03 Grants for Specific Scheme | (DPC 2401-00-112-UB -09 31) | 192.00 |
| 2401-00- Crop Husbandry-789-Special Component Plan for Schedule Castes Schemes Shared between State and Centre - US- - National Food Security Mission. | 09 Grants in Aid | 03 Grants for Specific Scheme | (DPC 2401-00-789-US-09 34) | 48.00 |
| | **TOTAL** | | | **240.00** |

3. **National Mission on Agricultural Extension and Technology- Sub Mission on Seed and Planting Material (Seed Village)**

(Rs. in lakh)

| Head of account | Detailed Head | Sub Detailed head | DPC | Amount Sanctioned |
|---|---|---|---|---|
| 2401-00-Crop Husbandry 102-Food Grain Crop - Schemes Shared between State and Centre- UC- Production and Distribution of Quality Seeds | 09 Grants in Aid | 03 Grants for specific scheme | 2401-00-102-UC-0930 | 345.60 |
| 2401-00-Crop Husbandry 789-Food Grain Crop Schemes Shared Between State and Centre- UR - Production and Distribution of Quality Seeds | 09 Grants in Aid | 03 Grants for specific scheme | 2401-00-789 UR-0936 | 86.40 |
| | | **TOTAL** | | **432.00** |

4. **State Fund**

(Rs. in lakh)

| Head of account | Detailed Head | Sub Detailed head | DPC | Amount Sanctioned |
|---|---|---|---|---|
| 2401-00-Crop Husbandry - 105 - Manures and Fertilizers State's Expenditure – JS – Kuruvai Special Package for Cauvery Delta Districts. | 11 Subsidies | 01 Individual based subsidy | 2401-00-00 -105 -JS - 1110 | 2534.00 |
| | | **TOTAL** | | **2534.00** |

6. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2017–2018ஆம் நிதியாண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2017–2018ஆம் நிதியாண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து, சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட, வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும், மேலே பத்தி 3ல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்குரிய கருத்துருவை 2017–2018ஆம் நிதியாண்டிற்கான துணை மதிப்பீடுகளில் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினை தவறாது உரிய நேரத்தில் நிதித் (த.வ.(ம).செ. வ.செ.பொ.1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு வேளாண்மை இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. உழவுப் பணி வேளாண்மை பொறியியல் துறையினால் மேற்கொள்ளப்படும். எனவே, இதற்கான ரூ.300.00 இலட்சம் நிதியினை தேசிய வேளாண் வளர்ச்சி திட்ட நிதியிலிருந்து வேளாண்மை இயக்குநர் பெற்று, தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) அவர்களுக்கு வழங்கிட அனுமதிக்கப்படுகிறது.

8. குறுவை சாகுபடித் தொகுப்புத் திட்டத்தினை செயல்படுத்தும் பொழுது, இத்திட்ட இனங்களில் ஏதேனும் நிதி சேமிப்பு ஏற்பட்டால், அதனை கூடுதல் பரப்பிற்கு பயன்படுத்திக்

கொள்ளவும், சம்பந்தப்பட்ட மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்கள் / செயற்பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) / வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மற்றும் உதவி செயற்பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) அவர்களுக்கு மானியத் தொகையை விடுவிக்கும் அதிகாரம் வழங்கிட, வேளாண்மை இயக்குநருக்கு / தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

9. இத்திட்டத்தினை விளம்பரப்படுத்தவும், ஒப்பந்த புள்ளிகள் கோரும் பணிக்கும், ஆவணப்படுத்தும் பணிக்கும், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையில் பராமரிக்கப்படும் தேசிய வேளாண் வளர்ச்சி திட்ட நிர்வாக செலவின நிதியிலிருந்து ரூ.13.00 இலட்சம் பெற்று, வேளாண்மை இயக்குநருக்கு வழங்கிட தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் செயல் இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

10. இவ்வாணை நிதித்துறையின் ஒப்புதலுடன் அத்துறையின் அ.சா.கு. எண்.01/வேளாண்மை/2017, நாள்: 13.6.2017 கூடுதல் ஒப்பளிப்பு பேரேடு எண்.688 (அறுநூற்று எண்பத்து எட்டு)ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி,
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சென்னை –5.
செயல் இயக்குநர், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, சென்னை–32.
தலைமைப் பொறியாளர்( வேளாண்மை பொறியியல்), சென்னை–35
சம்பள கணக்காளர் (கிழக்கு/தெற்கு) சென்னை –8 /35 (பெயரில்)
மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சி, கடலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்கள்.
கருவூல அலுவலர்கள் – உரிய மாவட்டங்கள்.
முதன்மை மாநில கணக்காயர் (A&E/G&SSA/E&RA/AAD) சென்னை –8. (பெயரில்)

**நகல்**

விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று இயக்குநர், கோயம்புத்தூர்–13.
இயக்குநர், STAMIN, குடுமியான்மலை, புதுக்கோட்டை மாவட்டம்.
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்–3.
நிதி (Agri./BG.I/BG.II) துறை, சென்னை –9.
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை –9.
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை –9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மறும் அரசு முதன்மைச் செயலரின் தனிச் செயலர், வேளாண்மைத் துறை, சென்னை –9.
வேளாண்மை (அநமு.3 / வேஉ.1 / வேஉ.3 / வேபொ.1) துறை, சென்னை –9.
கணினி விவரத் தொகுப்பாளர், வேளாண்மைத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவலர் 13.06.2017
13/6/17

**இணைப்பு–1**

**(அரசாணை (நிலை) எண்.144, வேளாண்மை (வேஉ2) துறை, நாள்.13.06.2017)**

**குறுவை சாகுபடி தொகுப்பு திட்டம் 2017**

| வ. எண் | திட்ட இனங்கள் | அலகு | ஏக்கர் ஒன்றுக்கு முழுத் தொகை (ரூ) | பொருள் (ஏக்கர்) | மானிய விகிதம் | நிதி ரூ. இலட்சம் | நிதி ஆதாரம் (ரூ இலட்சத்தில்) தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் | தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் | விதை மற்றும் நடவுப் பொருளுக்கான துணை இயக்கம் | மாநில நிதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | **நெற்பயிருக்கான உதவித்தொகை** | | | | | | | | | |
| | இயந்திர நடவுக்கான உதவித்தொகை | ஏக்கர் | 4000 | 80000 | 100% | 3200.00 | 1600.00 | 0.00 | 0.00 | 1600.00 |
| | ஜிங்க் சல்பேட் உபயோகத்திற்கான உதவித்தொகை | ஏக்கர் | 400 | 80000 | 100% | 320.00 | 160.00 | 0.00 | 0.00 | 160.00 |
| | திரவ உயிர் உரங்கள் விநியோகம் | ஏக்கர் | 120 | 80000 | 100% | 96.00 | 48.00 | 0.00 | 0.00 | 48.00 |
| | நுண்ணூட்ட உர விநியோகம் | ஏக்கர் | 200 | 25000 | 100% | 50.00 | 50.00 | 0.00 | 0.00 | 0.00 |
| ஆ | **பயறுவகை சாகுபடிக்கான ஊக்கத் தொகை** | | | | | | | | | |
| | விதை விநியோகம் | ஏக்கர் | 960 | 75000 | 100% | 720.00 | 0.00 | 0.00 | 432.00 | 288.00 |
| | திரவ உயிர் உர விநியோகம் | ஏக்கர் | 120 | 75000 | 100% | 90.00 | 0.00 | 45.00 | 0.00 | 45.00 |
| | டிஏபி இலைவழி தெளிப்புக்கான உதவித்தொகை | ஏக்கர் | 520 | 75000 | 100% | 390.00 | 195.00 | 0.00 | 0.00 | 195.00 |
| இ | **பொது இனங்கள்** | | | | | | | | | |
| 1 | உழவுக்கான உதவித்தொகை | ஏக்கர் | 500 | 60000 | 100% | 300.00 | 300.00 | 0.00 | 0.00 | 0.00 |
| 2 | நீர் பாசன குழாய்களுக்கான உதவித்தொகை | எண். | 28000 | 1300 | 75% (ரூ. 21000/–) | 273.00 | 0.00 | 195.00 | 0.00 | 78.00 |
| 3 | வெண்ணாறு பகுதியில் பசுந்தாள் உர விதை விநியோகம் | ஏக்கர் | 1200 | 20000 | 100% | 240.00 | 120.00 | 0.00 | 0.00 | 120.00 |
| 4 | விளம்பரம் மற்றும் ஆவணப்படுத்துதல் | | | | | 13.00 | 13.00 | 0.00 | 0.00 | 0.00 |
| | மொத்தம் | | | | | **5692.00** | **2486.00** | **240.00** | **432.00** | **2534.00** |

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்

/உண்மை நகல்/

(கையொப்பம்) 13.06.2017
பிரிவு அலுவலர்

## இணைப்பு–II

(அரசாணை (நிலை) எண்.144, வேளாண்மை (வேஉ.2) துறை, நாள்.13.06.2017)

**டெல்டா மாவட்டங்களில் குறுவை தொகுப்புத் திட்டம் 2017 ஐ செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்(Guidelines)**

### அ) நெல் பயிருக்கான இனங்கள்

**1) இயந்திர நடவிற்கான உதவித் தொகை (ஏக்கருக்கு அதிகபட்சமாக ரூ.4000/–)**

1. பாய் அல்லது தட்டு நாற்றங்கால் அமைத்து, இயந்திர நடவு மேற்கொள்வதற்கு, வேளாண்மை உதவி அலுவலர்கள் விவசாயிகளின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.
2. வேளாண்மை பொறியியல்துறை, தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் தனியார் மூலம் அமைக்கப்பட்டுள்ள இயந்திர வாடகை மையங்களில் உள்ள நடவு இயந்திரங்களை பயன்படுத்தி, நெல் நடவு மேற்கொள்ள விவசாயிகளுக்கு அறிவுரைகள் வழங்க வேண்டும்.
3. அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ஐந்து ஏக்கர் வரை உதவித் தொகை வழங்கலாம்.
4. குத்தகை விவசாயிகளுக்கு உரிய சான்றிதழை சரிபார்த்து உதவித் தொகை வழங்கலாம்.
5. இயந்திர நடவு உதவித்தொகை பெறுவதற்கான பயனாளிகள் பட்டியல் தயார் செய்யும் பொருட்டு, உத்தேச பரப்பு, உத்தேச நடவு நாள் ஆகிய விவரங்களுடன் உரிய படிவத்தில் வேளாண்மை உதவி அலுவலர்களிடம் நடவுக்கு முன்னரே விண்ணப்பிக்க வேண்டும்.
6. வேளாண்மை உதவி அலுவலர், வேளாண்மை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் இயந்திர நெல் நடவு மேற்கொள்ளப்பட்ட பரப்பளவினை ஆய்வு செய்து வேளாண்மை உதவி இயக்குநரிடம் உதவித் தொகை பெறுவதற்கு பரிந்துரை செய்ய வேண்டும்.
7. நடவு முடிந்து ஆய்வு மேற்கொண்ட பின், விவசாயிகள் பாய் அல்லது தட்டு நாற்றங்கால் அமைத்து, இயந்திர நடவு மேற்கொண்டதற்கான செலவுப்பட்டியல், வங்கி கணக்கு எண், வங்கிக்கணக்குப் புத்தகத்தின் நகல் மற்றும் நடவின் போது, விவசாயிகளுடன் சேர்த்து எடுத்த புகைப்படத்துடன் அலுவலகத்தில் சேர்ப்பிக்க வேண்டும்.
8. உதவித்தொகையானது விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக ECS மூலம் பற்று வைக்கப்பட வேண்டும்.

**2) துத்தநாக சல்பேட் உபயோகத்திற்கான உதவித்தொகை : (ஏக்கருக்கு அதிகபட்சமாக ரூ. 400/–)**

1. வேளாண்மை உதவி அலுவலர்கள் பயனாளிகளை தேர்வு செய்து உரிய விண்ணப்பத்தில் தகவல்களை பெற வேண்டும்.
2. ஒரு ஏக்கருக்கு 10 கிலோ வீதம் துத்தநாக சல்பேட் பயன்படுத்த வேண்டும்.
3. அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ஐந்து ஏக்கர் வரை உதவித் தொகை வழங்கலாம்.
4. வேளாண்மை இணை இயக்குநர்கள் தங்கள் மாவட்டத்திற்கு தேவையான துத்தநாக சல்பேட் உரத்தை, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான கொள்முதல் குழு மூலம் தரத்தை உறுதி செய்தபின் கொள்முதல் செய்து, வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைத்து பயனாளிகளுக்கு விநியோகிக்க வேண்டும்.

**3) திரவ உயிர்உர விநியோகம் (ஏக்கருக்கு அதிகபட்சமாக ரூ.120/–)**

1. அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபாக்டீரியா போன்ற திரவ உயிர் உரங்கள் ஏக்கருக்கு தலா 200 மி.லி வீதம் பயன்படுத்த வேண்டும்.
2. அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ஐந்து ஏக்கர் வரை திரவ உயிர் உரங்கள் வழங்கலாம்.

3. வேளாண்மை உதவி இயக்குநர்கள், திரவ உயிர் உரங்களை வேளாண்மைத் துறையின் உயிர் உர உற்பத்தி மையங்களிடமிருந்து பெற்று, வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைத்து விநியோகம் செய்ய வேண்டும்.
4. உயிர் உரங்களின் வருகை மற்றும் இருப்பை வேளாண்மை உதவி இயக்குநர்கள் உறுதி செய்ய வேண்டும்.
5. விவசாயிகளிடமிருந்து உரிய விண்ணப்பங்களை பெற்று உயிர் உரங்கள் விநியோகம் செய்யப்பட வேண்டும்.

**4) <u>நுண்ணூட்ட கலவை விநியோகம்</u> (ஏக்கருக்கு அதிகபட்சமாக ரூ.200/-)**

1. நெற்பயிருக்கான நுண்ணூட்ட கலவை ஏக்கருக்கு 5 கிலோ வீதம் பயன்படுத்த வேண்டும்.
2. அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ஐந்து ஏக்கர் வரை நுண்ணூட்ட கலவை வழங்கலாம்.
3. புதுக்கோட்டை குடுமியான்மலையில் இயங்கும் நுண்ணூட்டக் கலவை உற்பத்தி மையத்தின் மூலம் தேவையான நெல் நுண்ணூட்டக் கலவையினை முன் கூட்டியே பெற்று, வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் விநியோகம் செய்ய, வேளாண்மை உதவி இயக்குநர் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
4. நுண்ணூட்ட உரக் கலவை வருகை மற்றும் இருப்பை வேளாண்மை உதவி இயக்குநர் உறுதி செய்ய வேண்டும்.
5. விவசாயிகளிடமிருந்து உரிய விண்ணப்பங்களை பெற்றுக் கொண்டு இடுபொருட்கள் விநியோகம் செய்யப்பட வேண்டும்.

**ஆ) <u>பயறுவகை பயிருக்கான இனங்கள்</u>**

**1) <u>சான்று விதை விநியோகம்:</u> (ஏக்கருக்கு அதிகபட்சமாக ரூ.960/-)**

1. வேளாண்மை விரிவாக்க மையங்களில் தேவையான பயறு விதைகள் இருப்பு வைப்பதற்கு வேளாண்மை உதவி இயக்குநர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
2. விவசாயிகள் விரும்பும் பயறு ரகங்களை விநியோகம் செய்ய வேண்டும்.
3. வேளாண்மை விரிவாக்க மையங்கள் வாயிலாக அதிகபட்சமாக, ஒரு ஏக்கருக்கு 8 கிலோ பயறு விதை வழங்க வேண்டும்.
4. அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ஒரு ஏக்கருக்கு தேவையான விதைகளை மட்டுமே வழங்கலாம்.

**2) <u>திரவ உயிர்உர விநியோகம்</u> ( ஏக்கருக்கு அதிகபட்சமாக ரூ.120/-)**

1. ரைசோபியம் மற்றும் பாஸ்போபாக்டீரியா போன்ற திரவ உயிர் உரங்கள் ஏக்கருக்கு தலா 200 மி.லி வீதம் பயன்படுத்த வேண்டும்.
2. அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ஐந்து ஏக்கர் வரை திரவ உயிர் உரங்கள் வழங்கலாம்.
3. வேளாண்மை உதவி இயக்குநர்கள், திரவ உயிர் உரங்களை வேளாண்மைத் துறையின் உயிர் உர உற்பத்தி மையங்களிடமிருந்து பெற்று, வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைத்து விநியோகம் செய்ய வேண்டும்.
4. உயிர் உரங்களின் வருகை மற்றும் இருப்பை வேளாண்மை உதவி இயக்குநர்கள் உறுதி செய்ய வேண்டும்.
5. விவசாயிகளிடமிருந்து உரிய விண்ணப்பங்களை பெற்று உயிர் உரங்கள் விநியோகம் செய்யப்பட வேண்டும்.

3) <u>டிஏபி இலை வழி தெளிப்பு</u>(ஏக்கருக்கு அதிகபட்சமாக ரூ.520/–)

1. டிஏபி இலைவழி தெளிப்பானது பூக்கும் பருவத்திலும், அதன்பிறகு 15 நாட்களிலும் ஏக்கருக்கு தலா 5 கிலோ வீதம் ஆக இருமுறை பயன்படுத்த வேண்டும்.
2. வட்டார அளவில் டிஏபி உர இருப்பைப் பொறுத்து, அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது தமிழ்நாடு வேளாண் கூட்டுறவு இணையம் (TANFED) மூலமாக கொள்முதல் செய்து, வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைத்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட வேண்டும்.
3. தேவையான டிஏபி உர இருப்பு மற்றும் குறித்த காலத்தில் வேளாண்மை விரிவாக்க மையங்களில் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.
4. அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ஐந்து ஏக்கர் வரை டிஏபி உரம் வழங்கலாம்.
5. வேளாண்மை உதவி அலுவலர் டிஏபி உரத் தெளிப்பை உறுதி செய்த பின்னர், தெளிப்பிற்கான செலவுத் தொகையினை பின்னேற்பு மானியமாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் ECS மூலம் பற்று வைக்க வேண்டும்.

இ) <u>பொது இனங்கள்</u>

1) <u>உழவு மானியம்</u> : (ஏக்கருக்கு அதிகபட்சமாக ரூ.500/–)

1. வேளாண்மை உதவி அலுவலர்கள் பயனாளிகளை தேர்வு செய்து விண்ணப்ப படிவங்களை சேகரித்து, வேளாண் பொறியியல் துறை உதவிப் பொறியாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.
2. வேளாண்மை பொறியியல் துறை உதவிப் பொறியாளர் உழவு மேற்கொள்ள உள்ள நிலத்தினை ஆய்வு செய்து, உதவி செயற்பொறியாளர் (வே.பொ.) மூலம் மாவட்ட செயற்பொறியாளர் (வே.பொ.)க்கு பரிந்துரைக்க வேண்டும்.
3. உழவுப்பணியை வேளாண்மை பொறியியல் துறை மூலமாகவோ, விவசாயிகளிடம் இருக்கும் சொந்த உழவு இயந்திரங்கள் மூலமாகவோ, மேற்கொள்ளலாம்.
4. உழவுப் பணி மேற்கொண்டதை வேளாண்மை பொறியியல் துறை அலுவலர்கள் உறுதி செய்த பின்னர் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் பின்னேற்பு மானியத்தொகையாக ஏக்கருக்கு ரூ 500 /– செலுத்தப்பட வேண்டும்.
5. அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ஐந்து ஏக்கர் வரை உழவுப்பணிக்கான உதவித்தொகை வழங்கலாம்.

2) <u>நீர் பாசனக் குழாய்கள் விநியோகம்</u> (ஒரு அலகுக்கு ரூ.21000/–)

1. இத்திட்டம் மூலம் 110 மி.மீ விட்டம் மற்றும் 6 மீ நீளம் கொண்ட பிவிசி குழாய்கள் 30 குழாய்கள் வழங்கப்படும். அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ஓர் அலகு மட்டுமே வழங்கப்பட வேண்டும்.
2. 110 மி.மீ விட்டம் மற்றும் 6 மீ நீளம் கொண்ட பிவிசி குழாய்கள் தேவையை கணக்கிட்டு, உரிய நிறுவனங்களையும் விலைப்புள்ளியினையும் வேளாண் பொறியியல் துறை பட்டியலிட வேண்டும் (to be empanelled)
3. தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் முழுமையான விவரங்களுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை வேளாண்மை உதவி அலுவலர்கள் சேகரிக்க வேண்டும்.

4. ஆழ்துளை கிணறு அல்லது வடிமுனைக் குழாய்கள் தங்கள் வயல்களில் உள்ள விவசாயிகளுக்கும், கடந்த இரண்டு ஆண்டுகளில் நீர்ப்பாசனக் குழாய்கள் இதரத் திட்டடங்களில் பயனடையாத விவசாயிகளை தேர்வு செய்ய வேண்டும்.
5. நீர் பாசன குழாய்கள் பெறுவதற்கு, தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான முன்னுரிமை பதிவேட்டினை வேளாண்மை உதவி இயக்குநர் / வேளாண்மை அலுவலர் / வேளாண்மை உதவி அலுவலர் பராமரிக்க வேண்டும்.
6. வேளாண்மை பொறியியல் துறையினரால் பட்டியலிடப்பட்ட நிறுவனத்திடமிருந்து நீர்ப் பாசன குழாய்கள் பெறுவதற்கு உதவி வேளாண்மை அலுவலர் விவசாயிகளிடமிருந்து முன்பணப்பட்டியல் மற்றும் முழுத் தொகைக்கான வரைவோலையுடன் கூடிய விண்ணப்பம் பெற வேண்டும்.
7. உதவி வேளாண்மை அலுவலரால் பெறப்பட்ட விண்ணப்பங்கள் வேளாண்மை அலுவலர் / துணை வேளாண்மை அலுவலர் அவர்களால் சான்றளிக்கப்பட்டு வேளாண்மை உதவி இயக்குனருக்கு பரிந்துரைக்கப்பட வேண்டும்.
8. வேளாண்மை உதவி இயக்குநர் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு நீர்ப்பாசன குழாய்கள் வழங்க ஆணை அளிக்க வேண்டும்.
9. நீர் பாசன குழாய்கள் விவசாயிக்கு வழங்கப்பட்டதனை வேளாண்மை உதவி இயக்குநர் ஆய்வு செய்து உரிய புகைப்படத்துடன் உறுதி செய்த பின், விவசாயிகளின் வங்கிக் கணக்கில் மானியத் தொகையினை ECS மூலம் செலுத்த வேண்டும்.

**3) <u>வெண்ணாறு பகுதிக்கான பசுந்தாள் உர விதைகள் விநியோகம்</u> (ஏக்கருக்கு ரூ.1200/-)**

1. தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட வெண்ணாறு பகுதிகளுக்குத் தேவையான பசுந்தாளுர விதைகளை, வேளாண்மை இணை இயக்குநர், திருவாரூர் அவர்கள் ஒப்பந்தப் புள்ளி வாயிலாக கொள்முதல் செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட விரிவாக்க மையங்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும்.
2. வேளாண்மை விரிவாக்க மையங்களில் தேவையான அளவு பசுந்தாள் உர விதைகளை இருப்பு வைப்பதற்கு தொடர்புடைய வேளாண்மை உதவி இயக்குநர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
3. வேளாண்மை விரிவாக்க மையங்கள் வாயிலாக ஒரு ஏக்கருக்கு 20 கிலோ பசுந்தாள் உர விதைகள் விநியோகம் செய்யப்படும்.
4. அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு ஐந்து ஏக்கர் வரை பசுந்தாள் உர விதைகள் வழங்கலாம்.

திட்ட செயலாக்கத்தின் போது உரிய இனங்களுக்கு, சம்பந்தபட்ட மத்திய அரசு திட்ட வழிகாட்டியினை பின்பற்றுதல் வேண்டும். அதற்கான மானியத் தொகையினை இணைப்பு ஒன்றில் கண்டுள்ள அந்தந்த திட்டக் கணக்குத் தலைப்பில் நேர் செய்யப்படவேண்டும். மேலும், ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான விளம்பர நிதியினை செலவிடுவதற்கு உரிய தெளிவுரையினை வேளாண்மை இயக்குநர் மாவட்டங்களுக்கு வழங்க வேண்டும்.

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல் //

பிரிவு அலுவலர் 13-06-2017

12/6/17